## ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் தமிழ்நாட்டுக்கு இல்லை:

# அ.தி.மு.க. எனும் போர்வையுடன் பா.ஜ.க. வரப் பார்க்கிறது! தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் அனுமதிக்கக் கூடாது!

### திருப்பத்தூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!



**சிவகங்கை,ஏப்.6 –**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் தமிழ்நாட்டுக்கு இல்லை. `தமிழ்நாடு' என்கிற பெயரே ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் இல்லை. அப்படிப் பட்ட பா.ஜ.க. நேரடியாக வந்தால், தமிழ்நாட்டுக்குள் நீங்கள் நுழைய விடமாட்டீர்கள் என்று, அ.தி.மு.க என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டு இன்று தமிழ்நாட்டுக்குள் வரப்பார்க்கிறது. தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் அனுமதிக்கக் கூடாது” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்று தலைவர் அவர்கள் ஒரு சிறந்த வேட்பாளரை, வெற்றி வேட்பாளரை அண்ணன் பெரியகருப்பன் அவர்களை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார். வருகின்ற 23ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து, அண்ணன் பெரியகருப்பன் அவர்களைச் சென்ற தேர்தலில் 37,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டபேரவைக்கு அனுப்பினீர்கள். இந்த முறை ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து அனுப்ப வேண்டும்.

**கலைஞரின் அன்புத் தம்பி**

அண்ணன் பெரியகருப்பன் அவர்களை நான் உங்களிடம் அறிமுகப்படுத்தத் தேவையில்லை. உங்கள் அத்தனை பேருக்கும் நன்கு அறிமுகமானவர் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள். ஏற்கனவே நான்கு முறை போட்டியிட்டு நான்கு முறையும் வெற்றியை மட்டுமே கண்டவர் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள். கலைஞரின் பாசத்துக்கு உரியவர், கலைஞரின் அன்புத் தம்பி, நம் தலைவரின் தளபதி அவர். என் மீது அளவுகடந்த அன்பு வைத்திருப்பவர் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள். அப்படிப்பட்ட பெரியகருப்பன் அவர்களுக்காகத்தான் நான் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். மிகவும் அதிர்ந்து பேசமாட்டார், ஆனால் செயலில் இறங்கிவிட்டால், நிச்சயம் அதைச் செய்து காட்டாமல் ஓயமாட்டார்.

இந்தத் தொகுதிக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். எப்பொழுதுமே மக்களோடு மக்களாய் உங்களோடு பயணிக்கக்கூடியவர். அப்படிப்பட்ட பெரியகருப்பன் அவர்களைக் குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துத் தேர்ந்தெடுத்து நீங்கள் சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

**இயக்கத் தலைவர்கள்**

இந்த சிங்கம்புணரி மண்ணுக்கு வந்து உங்களையெல்லாம் சந்தித்துப் பேசுவதில் எனக்குக் கூடுதல் பெருமை. இந்த சிங்கம்புணரி மண் திராவிட இயக்கத்துக்குப் பல்வேறு பெரிய பெரிய மூத்த திராவிட இயக்கத் தலைவர்களைக் கொடுத்த மண் இந்தத் திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி. உதாரணமாக, அண்ணன் ஐயா மாதவன் அவர்கள் நான்கு முறை நீங்கள் தேர்வு செய்து அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்பினீர்கள். அண்ணாவின் மிக நெருங்கிய நண்பர் ஐயா மாதவன் அவர்கள். அதே மாதிரி அண்ணாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும், இரண்டு முறை அமைச்சராக இருந்தவர். இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். அவரின் சிலையை நான்தான் சில மாதங்களுக்கு முன்பு இங்கு வந்து திறந்து வைத்தேன்.

அதேபோல் `சிறுகதை மன்னன்' அண்ணன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள் இந்தப் பகுதி மக்களுக்கு நிறைய திட்டங்களைக் கொண்டு வந்தவர். கலைஞரின் நண்பர். எல்லாரும் அவரை `சிறைப்பறவை' என்று சொல்வார்கள், ஏனென்றால், மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு மக்களுக்காகச் சிறை சென்றவர் அண்ணன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள். கிருங்காக்கோட்டையில் அணை கட்டியதற்காக அவருக்கு அங்கிருக்கக்கூடிய மக்கள் எல்லாம் சேர்ந்து சிலை வைத்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு புனரமைக்கப்பட்ட சிலையை நான்தான் வந்து திறந்து வைத்தேன்.

முன்னாள் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அண்ணன் தா.கி அவர்கள், அவரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். உங்களுக்காக உழைத்தவர். மக்கள் பிரதிநிதியாக, அமைச்சராக இந்தப் பகுதிக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர் அண்ணன் தா.கி அவர்கள். அதேபோல பெரிய அழகு அவர்கள், ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டத்தின் பொறுப்பாளராக, கழகப் பணி, ஒன்றியப் பெருந்தலைவராக மக்கள் பணியாற்றியவர் அண்ணன் பெரிய அழகு அவர்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த இராம. சிவராமன் அவர்கள் வளர்த்தெடுத்த பகுதி இந்த சிங்கம்புணரி, திருப்பத்தூர் பகுதி.

**திருப்பத்தூர் - சிங்கம்புணரி திட்டங்கள்**

சென்ற 2021ஆம் ஆண்டு தேர்தலில் நீங்கள் வாக்களித்து அண்ணன் அவர்களை வெற்றிபெறச் செய்து அனுப்பினீர்கள். இந்தப் பகுதிக்குப் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்.

திருப்பத்தூர் மேலூர் வரை நான்கு வழிச் சாலைப் பணிகள் இன்று 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றிருக்கிறது.

சுமார் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பூலாங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு இன்று கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

**22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பத்தூர் பேரூராட்சியில் உள்ள வீடுகளுக்கு சீரான குடிநீர் வழங்கப்படுகிறது என்றால், அது அண்ணனின் முயற்சியில் நடந்திருக்கிறது.**

**திருப்பத்தூரில் காவலர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. பள்ளத்தூர் பகுதியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவலர் குடியிருப்புப் பணிகள் அண்ணன் அவர்கள் முயற்சியில் வந்திருக்கின்றன.**

சிங்கம்புணரியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியக் கிடங்கு அண்ணனின் முயற்சியில் வந்திருக்கிறது. 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் மற்றும் வருவாய் அலுவலர் அலுவலகங்கள், ஆய்வாளர் அலுவலகங்கள், சிங்கம்புணரி மற்றும் புழுதிப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இன்று கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

கோட்டையூரில் அண்ணன் பெரியகருப்பன் அவர்களின் கோரிக்கையை ஏற்று, நம் விளையாட்டுத்துறை சார்பாக ஒரு நவீன கால் பந்து மைதானம் கேட்டார், உடனே செய்து கொடுத்துவிட்டோம். அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

புதிய கோரிக்கைகள்

இன்னும் பல்வேறு திட்டங்களைப் பகுதிக்குக் கொண்டு வர வேண்டும். அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் என்னிடத்தில் ஒரு கோரிக்கை வைத்தார்கள், சில கோரிக்கைகளை நாம் ஆட்சிக்கு வந்ததும் இந்தப் பகுதிக்குச் செய்து கொடுக்க வேண்டும்.

செவரக்கோட்டை காளாப்பூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒரு நல்ல சமுதாய நலக்கூடம் தேவை.

கரையூர், புதுவளவு, மணக்குடி, நாராயணமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு மயானத்துக்குச் செல்வதற்குப் பாதை அமைத்துத் தர வேண்டும். கோட்டையூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

நெற்குப்பையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும். நெற்குப்பையில் நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். எஸ்.புதூர் ஒன்றியத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவமனை தேவை. வடவன்பட்டியில் கால்நடை மருத்துவமனை தேவை.

ஆத்தங்குடி ஊராட்சியில் ஒரு மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். கோட்டையூரிலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். கானாடுகாத்தானில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

**ஐந்து ஆண்டு கால சாதனைகள்**

**இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். நான் உங்களுக்கு வாக்குறுதி கொடுக்கிறேன், அண்ணன் பெரியகருப்பன் அவர்களை ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புவீர்கள் என்று நீங்கள் எனக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன், நீங்கள் அண்ணன் அவர்களை வெற்றிப்பெற செய்தீர்கள் என்றால் அண்ணன் அவர்கள் என்னிடம் கொடுத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கைகளை நிச்சயம் நான் நடத்தித் தருவேன்.**

இன்று தலைவர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று மக்களைச் சந்தித்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். நான் கடந்த ஐந்து நாட்களாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஒவ்வொரு தொகுதியாகச் சென்று மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டுக்கொண்டிருக்கிறேன். எந்தத் தைரியத்தில் வந்திருக்கிறேன் என்றால், கடந்த ஐந்து ஆண்டுகள் திராவிட மாடல் ஆட்சியில் சொன்ன வாக்குறுதிகள் அத்தனையையும் நம் அரசு காப்பாற்றியிருக்கிறது. உதாரணத்துக்குச் சில விஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிடவும், நினைவூட்டவும் விரும்புகிறேன்.

கட்டணமில்லாப் பேருந்து திட்டம்

கடந்த முறை நம் தேர்தல் வாக்குறுதியில் சொன்னோம். ஆட்சிக்கு வந்த உடனேயே மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டத்தைக் கொடுப்போம் என்று சொன்னோம். நம் முதலமைச்சர் வெற்றிபெற்றவுடனேயே, முதலமைச்சர் பொறுப்பேற்றவுடனேயே அவர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம், மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். இன்று அந்தத் திட்டத்தில் ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும், படிக்க வேண்டும் என்பதற்காக இன்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகள் காலையில் அரசுப் பள்ளிக்கு வந்து படித்தார்கள் என்றால், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பசியோடு படிக்கக் கூடாது. பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வியை நம் அரசு கொடுத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, பள்ளிக்கூடத்துக்கு வந்தது போதாது, கல்லூரிக்குச் சென்று, மேல்படிப்புப் படிக்க வேண்டும் என்று, அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கச் சென்றால், அது தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக மாதந்தோறும் 1,000 ரூபாய் நம் திராவிட மாடல் அரசு கொடுத்திருக்கிறது. 13 லட்சம் மாணவ, மாணவிகள் இதில் பயன்பெற்றிருக்கிறார்கள்.

**10 லட்சம் மடிக்கணினிகள்**

இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம். 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு ஒரே மாதத்தில் மடிக்கணினி கொடுத்திருக்கிறோம். இன்று அ.தி.மு.க ஒரு பொய்க் குற்றச்சாட்டை வைக்கிறார்கள். இந்த மடிக்கணினி திட்டம் அ.தி.மு.க கொண்டு வந்த திட்டம் என்று. ஆம், அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான். அ.தி.மு.க ஆட்சியில் பள்ளிக்கூடம் படிக்கிற குழந்தைகளுக்கு மடிக்கணினி கொடுத்தார்கள். ஆனால், 2019ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியிலேயே அதை நிறுத்திவிட்டார்கள், அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால், நம் முதலமைச்சர், இந்த மடிக்கணினி திட்டத்தை பள்ளிக்கூட குழந்தைகளைவிடக் கல்லூரி படிக்கிற மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஒரு மேல்படிப்புப் படிப்பதாக இருக்கட்டும், ஒரு வேலைக்குச் செல்வதாக இருக்கட்டும், ஒரு ப்ராஜக்ட் தயாரிப்பதாக இருக்கட்டும், மடிக்கணினி கல்லூரி மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று இன்று 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினியை நம் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

தேர்தல் வாக்குறுதியில் நாம் சொன்ன வாக்குறுதிகளில் இதை கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை. இன்று கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்திருக்கிறார்.

**நிறுத்துவதற்கு திட்டம் போட்டார்கள்**

அந்தத் திட்டத்தை தேர்தலைக் காரணம் காட்டி எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் திட்டம் போட்டார்கள். ஆனால் நம் தலைவர் அந்தச் சூழ்ச்சியை முறியடித்துப் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து ஒரே தவணையாக, கோடைக்காலச் சிறப்பு நிதி என்று 5,000 ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கொடுத்திருக்கிறோம். தலைவர் காலையில் 6:30 மணிக்கு வங்கிக் கணக்கில் செலுத்தினார்கள். நம் மகளிர் எல்லாம் என்ன செய்தார்கள், காலை 9:00 மணிக்கே சென்று எடுத்துவிட்டார்கள். ஏன்? மோடி மீது, ஒன்றிய அரசு மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. குறைந்தபட்ச இருப்பு என்று சொல்லி, மோடி அந்தப் பணத்தையும் எடுத்துவிடுவார் என்று நம் மகளிர் மிகத் தெளிவாக எடுத்தார்கள்.

இன்று நம் தலைவர் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அந்த மகளிர் உரிமைத் தொகை மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

**இல்லத்தரசி திட்டம்**

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை வழங்கப்படும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம்.

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாயிலிருந்து மாதம் 1,500 ஆக உயர்த்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு வீடற்றவர்களுக்கு வீடு வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

முதியோர் உதவித் தொகை இப்போது 1,200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், அதை உயர்த்தி 2,000 ரூபாய் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான திட்டம் உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும், அதுதான் இல்லத்தரசி திட்டம். ஆட்சி அமைந்த உடனே முதலமைச்சர் அவர்கள் எல்லா மகளிருக்கும் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்த கூப்பனை வைத்துக் கொண்டு இல்லத்தரசிகள் நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள், உங்கள் வீட்டிற்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவையென்றாலும், நீங்களே தேர்வு செய்து வாங்கிக் கொள்ளலாம். அது தொலைக்காட்சியாக இருந்தாலும் சரி, ஃபிரிட்ஜ் ஆக இருந்தாலும் சரி, துணி துவைக்கும் இயந்திரமாக இருந்தாலும் சரி, அரவை இயந்திரமாக இருந்தாலும் சரி, அது உங்கள் விருப்பம். நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம். இதுதான் இல்லத்தரசி திட்டம்.

**மிகப்பெரிய வெற்றி**

இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையவேண்டும். நிச்சயம் நீங்கள் அதை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று மிகப்பெரிய வெற்றியை நாம் பெறப்போகிறோம். கண்டிப்பாக வெற்றிபெறுவோம்.

நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணிக்கும் தமிழ்நாடு அணிக்கும் நடக்கக்கூடிய தேர்தல். இதில் டெல்லி அணியை நாம் வீழ்த்தியாக வேண்டும். ஏன் டெல்லி அணி என்று சொல்கிறோம்? நாம் தமிழ்நாட்டுக்கு இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறோமே, ஒன்றிய அரசு, டெல்லி அரசு நமக்கு ஏதாவது கொடுத்திருக்கிறதா? ஏதாவது உதவி செய்திருக்கிறார்களா? நிதி கொடுக்கிறார்களா? நாம் கேட்கிற நிதியைக் கொடுக்கிறார்களா? கிடையாது.

**அனுமதிக்கக் கூடாது**

கல்வி நிதி வரவில்லை. ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் தமிழ்நாட்டுக்கு இல்லை. ‘தமிழ்நாடு’ என்கிற பெயரே ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் இல்லை. அப்படிப் பட்ட பா.ஜ.க. நேரடியாக வந்தால், தமிழ்நாட்டுக்குள் நீங்கள் நுழைய விடமாட்டீர்கள் என்று, அ.தி.மு.க என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டு இன்று தமிழ்நாட்டுக்குள் வரப் பார்க்கிறது. தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் அனுமதிக்கக் கூடாது. ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குப் 10 தோல்விகளைக் கொடுத்திருக்கிறோம். இந்தத் தேர்தலோடு 10 தோல்வி பழனிசாமியை மொத்தத் தோல்வி பழனிசாமியாக்கி, வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நேரம் இது.

நீங்கள் முரட்டு பக்தர்களைப் பார்த்திருக்கிறீர்கள், முரட்டுத் தொண்டர்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா முரட்டு அடிமையை? மோடியின் முரட்டு அடிமையாக இன்று இந்தியாவிலேயே நம்பர் ஒன் அடிமை எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான். ‘ஜாடிக்கேற்ற மூடி’ என்று சொல்வார்கள், அது மாதிரி இன்று மோடிக்கேற்ற ஒரு எடப்பாடி பழனிசாமி தான் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக அமைந்திருக்கிறார். மீண்டும் இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டில் பாசிசக் கூட்டத்துக்கு, சங்கிக் கூட்டத்துக்கு இடமில்லை என்று அனுப்ப வேண்டிய தேர்தல் வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தல்.

இன்று தேதி 4. தேர்தல் 23ஆம் தேதி. நம்மிடம் இன்னும் 19 நாட்கள் இருக்கின்றன. உதயநிதி வந்தார், பேசினார் என்று கூட்டம் கலைந்து போய்விடக் கூடாது. அடுத்த 19 நாட்கள் பிரச்சாரத்தில் நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். ஒவ்வொரு தெருவாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வீடாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தியுங்கள்.

**திராவிட மாடல் 2.0 ஆட்சி**

**வரும் 23ஆம் தேதி வரை இந்தப் பிரச்சாரத்தை ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சென்று பேசுங்கள். ஏன் மீண்டும் தி.மு.க ஆட்சிக்கு வர வேண்டும்? ஏன் பி.ஜே.பி தமிழ்நாட்டுக்குள் நுழையக்கூடாது? ஏன் திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர வேண்டும் என்கிற பிரச்சாரத்தை நீங்கள் செய்ய வேண்டும். செய்தீர்கள் என்றால் நிச்சயம் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெறுவார்.**

உங்களையெல்லாம் நான் மீண்டும் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அண்ணன் பெரியகருப்பன் அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப்பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.

மீண்டும் நம் தலைவரின் ஆட்சி அமையப் போவது உறுதி. இந்தத் திருப்பத்தூர் தொகுதிக்கு மீண்டும் என்னென்ன திட்டங்கள் தேவையோ அனைத்தையும் அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் உங்களிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பார்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி என்று தெரிவித்தார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

திருப்பத்தூர் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர், அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்பட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழ்ப் புலிகள் கட்சி, எஸ்.டி.பி.ஐ, முக்குலத்தோர் புலிப்படை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, மக்கள் விடுதலைக் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைத்துத் தோழமைக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.